வெளியீடு நகல்

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

பொதுப்பணித்துறை – திட்டப் பணிகள் செயலாக்குதல் – ஒப்பந்தப்புள்ளிகளில் முடிவெடுத்தலில் ஏற்படும் தாமதம் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

பொதுப்பணி (டி2) துறை

அ.ஆ.(நிலை) எண்.555 நாள்.17.11.1999.

1. அரசு ஆணை (நிலை) எண்.873, பொ.ப.து., நாள். 4.5.92.
2. அரசு ஆணை (நிலை) எண்.830, பொபது.(டபிள்யு ஆர்1) நாள்.24.12.96.
3. அரசு ஆணை (நிலை) எண்.490, நிதி (சம்பளம்) நாள்.11.9.98.
4. அ.ஆணை (நிலை) எண்.21, நெடுஞ்சாலை(எச்.எண்.1) துறை, நாள்.25.1.99.
5. அரசு கடித எண்.2294.எச்.என்/99-1, நெடுஞ்சாலைத் துறை, நாள்.19.2.1999.

-----

**ஆணை:**

நெடுஞ்சாலைத் துறையில் திட்டப் பணிகளை செயலாக்கும்போது திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளில் முடிவெடுப்பதில் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்ப்பதற்காக, புதிய நடைமுறைகளைப் பின்பற்ற பார்வை 4 மற்றும் 5-ல் கண்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. ஒரே அரசின் கீழுள்ள இரண்டு பொறியியல் துறைகளில் இரு வேறு விதமான விதிமுறைகள் இருப்பது உகந்தது அல்ல என்றும் நெடுஞ்சாலைத்துறையில் பின்பற்றப்படும் விதி முறைகளை இத்துறையிலும் பின்பற்றலாம் எனவும் கருதப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு (Tender Award Committee) ஏற்படுத்துவதின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது முடிவெடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்க்கலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு அமைப்பதன் மூலம் விதி முறைகளின்படி மிகவும் விரைவாக செயல்படுத்த இயலும் என்றும் அரசு கருதுகிறது.

3. எனவே பார்வை 4 மற்றும் 5-ல் கண்ட நெடுஞ்சாலைத்துறையின் ஆணையினைப் பின்பற்றி, பொதுப்பணித்துறையின் திட்டப் பணிகள் குறித்த ஒப்பந்தப்-



Scanned by CamScanner

புள்ளிகளில் முடிவெடுப்பதில் கீழ்க்காணும் புதிய நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்று முடிவு செய்து, அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(அ) ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு

ஒப்பந்தப்புள்ளி மீது விரைவாக முடிவு எடுக்க

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர் – தலைவர்
2. தலைமைப் பொறியாளர் (கட்டிடம்)
3. தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்)
4. நிதித்துறைச் செயலரின் பிரதிநிதி.

ஆகியோர் அடங்கிய ஒரு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு (Tender Award Committee) ஏற்படுத்தவும் இக்குழுவிற்கு உச்ச வரம்பு இன்றி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளிலும் மற்றும் தலைமைப் பொறியாளர்களின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் முடிவு எடுக்க அதிகாரம் வழங்கப்படுகிறது. முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவின் தலைவராகவும், அவரது அலுவலகம் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவின் அலுவலகமாகவும் செயல்படும். பெறப்பட்ட செயற்குறிப்புகளை மற்ற நிரந்தர உறுப்பினர்களிடையே சுற்றுக்கு விட்டு, ஐந்து நாட்களுக்குள் கூட்டம் நடத்தப்பட்டு குழுவின் முடிவுகளை சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும்.

ஆ. நடைமுறைக்கேற்ற விலைப்பட்டியல்

பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் வரம்பை கூடுதலாக உயர்த்துவதைவிட நடைமுறைகளுக்கேற்ற விலைப்பட்டியல் (Standard Schedule of Rates) தயாரிக்கலாம். மேலும் நடைமுறைக்கு ஏற்ற விலைப்பட்டியல் தயாரிக்க முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), தலைமைப்பொறியாளர் (வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமானப் பணி) மற்றும் நிதித்துறையைச் சார்ந்த பிரதிநிதி அடங்கிய குழுவை நியமிக்கலாம்.

இ. மாற்று வடிவமைப்பு

பராமரிப்புப் பணி அல்லாத மூலப் பணிகளுக்கு (Original Works) ரூபாய் 5.00 கோடி வரையுள்ள மதிப்பீடுகளுக்கு, மதிப்பீட்டு விலைக்கு மேல் சதவிகித அடிப்படையில் ஒப்பந்தம் கோரலாம். ரூபாய்.5.00 கோடிக்கு மேலுள்ள பணிகளுக்கு மாற்று வடிவமைப்பு (Alternative Designs) ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம் என்றும், 1999-2000 ஆண்டுக்கான விலைப்பட்டியல் தயாரித்து, பின் அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு சதவிகித அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் முறை கடைபிடிக்கப்பட வேண்டும்.

.3.

Scanned by CamScanner

ஈ. ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம்:

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கப்படும் கால அவகாசம் (ஒப்பந்தப்புள்ளி கோரும் நாளுக்கும் ஒப்பந்தப்புள்ளி பிரிக்கும் நாளுக்கும் இடையே உள்ள கால அவகாசம்) ரூ.2.00 கோடி வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 15 நாட்களாகவும், ரூ.2.00 கோடிக்கு மேலுள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 30 நாட்களாகவும் நிர்ணயிக்கப்படலாம். இரண்டாவது அழைப்பிற்கு ரூ.2.00 கோடி வரை 7 நாட்கள் மற்றும், ரூ.2.00 கோடிக்கு மேலுள்ள பணிகளுக்கு 15 நாட்கள் எனவும் கால அவகாசம் நிர்ணயிக்கப்படலாம். 20 சதவிகிதத்திற்கு மிகையான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டால் அவற்றை நிராகரிக்கலாம். முதல் இரண்டு அழைப்புகளில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறாத நிலையில் பணிகளை தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கலாம்.

உ. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்குதல்:

ஒரு பணிக்கு ஒன்றுக்கு அதிகமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்கப்பட்டாலும் படிவங்கள் பெற்ற சில ஒப்பந்தக்காரர்கள் பங்கேற்காமல் மிகச்சில ஒப்பந்தப்புள்ளிகளே பெறப்படுகின்றன. இந்நிலையைப் போக்குவதற்கு ஒப்பந்தப்படிவங்கள், விளம்பரத்தில் குறிப்பிட்ட நாளன்று தொடங்கி ஒப்பந்தம் பெறுவதற்கு குறிப்பிட்ட நாளுக்கு முந்தைய நாள்வரை வழங்கலாம்.

ஊ. ஒப்பந்தச் சான்றிதழ்:

ஒப்பந்தக்காரர்கள் பதிவுச் சான்றிதழில், ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தங்களில் கலந்துகொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்று ஒப்பந்தங்களில் கலந்துகொள்ளாமல் விட்டாலோ, அவர்களின் பதிவு காலாவதி ஆகிவிடும் என்ற நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளலாம். 15 முதல் 20 சதவிகிதத்திற்கும் குறைவாகப் பெறப்படும் ஒப்பந்தங்களை ரத்து செய்வதற்குப் பதிலாக, துறை மதிப்பீட்டிற்கும் ஒப்பந்தப்புள்ளித் தொகைக்கும் உள்ள வித்தியாசத்தில் 50 சதவிகிதம் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தினால் ஏற்கலாம். 5 சதவிகிதம் முதல் 15 சதவிகிதத்திற்குக் குறைவாகப் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளுக்கு 2 சதவிகிதம் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தினால் ஏற்கலாம்.

எ. ஒப்பந்தக்காரர்களுக்கு ஊக்கத்தொகை:

குறிப்பிட்ட காலத்திற்குள் நல்ல தரத்துடன் பணிகளை நிறைவேற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் ஊக்கத் தொகை (Incentive Bonus) தரலாம். மேலும் பணிகளை சரிவர குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கலாம்.



Scanned by CamScanner

**ஏ. பணிகளை செயல் படுத்தும்போது ஏற்படும் கூடுதல் வேலை இனங்கள்/வேலை அளவுகள் ஒப்புதல் அளிக்கும் முறை:**

ஒப்பந்தப்புள்ளிகளில் விரைவாக முடிவு எடுக்க முறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

1. தலைமைப் பொறியாளர்: ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 25 சதவிகிதம் அல்லது ரூ.10.00 லட்சம் இவற்றில் எது குறைந்ததோ அந்தத் தொகை.
2. கண்காணிப்புப் பொறியாளர்: ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 10 சதவிகிதம் அல்லது ரூ.2.5 இலட்சம் இவற்றில் எது குறைந்ததோ, அந்தத்தொகை.
3. செயற்பொறியாளர்: ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 10 சதவிகிதம் அல்லது ரூ.30.000 இவற்றில் எது குறைந்ததோ, அந்தத்தொகை.

4. அரசு பொதுப்பணித் துறையில், ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவி-லிருந்து பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி விவரங்களையும் அவற்றின் மேல் எடுக்கப்பட்ட முடிவுகளையும் மாதாந்திர காலமுறை அறிக்கை செய்வதன் மூலம் கண்காணிக்கப்படும்.

5. பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் அமைக்கப்பட்ட ஒப்பந்தப்-புள்ளிக் குழுவும், ( Tender Committee ) பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணையில் அமைக்கப்பட்ட ஒப்பந்தம் வழங்கும் குழுவும் (Contract Award Committee ) கலைக்கப்படுகின்றன.

6. மேலும் ரூபாய் ஒரு கோடிக்கு மேலுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கான முடிவு செய்யும் அதிகாரம் தற்போது உருவாக்கப்படவிருக்கும் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவிற்கு அளிக்கப்படவிருப்பதால் தற்போது பொறியாளர் குழுவிற்கு ( Board of Engineers ) ரூ.1.50 கோடி வரையுள்ள அதிகாரத்தைத் திரும்பப் பெறலாம்.

7. இவ்வாணை அ.சா.கு.எண்.4231/FS/P/99, நாள்.17.11.99 மூலம் நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.ப.குப்தா,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொ.ப.து., சென்னை-5.

/உண்மை நகல்/

தலைமைப்பொறியாளர் ( [illegible] ) சார்பில்.